**சூரியவெவ பிரதேச சபை**

**அம்பாந்தோட்டை மாவட்டம்**

------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மே 22 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 மார்ச் 26 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆகஸ்ட் 10 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 பாதகமான அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் முக்கியத்தவத்தின் காரணமாக சூரியவெவ பிரதேச சபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் வழங்கவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மொத்த தேறிய சொத்துக்களின் பெறுமதி மற்றும் பொறுப்புக்களின் பெறுமதி ரூபா 137,335,911 இற்குச் சமமானதாக பிழையாகக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், மொத்தச் சொத்துக்களின் சரியான பெறுமதி ரூபா 134,937,042 ஆகவும் மொத்த தேறிய பொறுப்புக்களின் கூட்டுமொத்தம் ரூபா 128,247,902 ஆகவும் இருந்தமையால் மொத்த தேறிய சொத்துக்களுக்கும் பொறுப்புக்களுக்கும் இடையே ரூபா 6,689,140 வேறுபாடு காணப்பட்டது.

(ஆ) பிரதான பேரேட்டில் பேணப்பட்டு வந்த திரண்ட நிதியின் மிகை மற்றும் பற்றாக்குறைக் கணக்கின் மொத்த செலவு மீதியின் சரியான பெறுமதி ரூபா 13,892,227 ஆக இருந்த போதிலும், பிழையாக ரூபா 22,980,235 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்தது. ஆண்டின் இறுதியில் திரண்ட நிதியின் மிகை மற்றும் பற்றாக்குறைக் கணக்கின் சரியான செலவு மீதி ரூபா 3,422,934 ஆக இருக்க வேண்டிய போதிலும் அது பேரேட்டுக் கணக்கில் ரூபா 12,510,942 ஆக ரூபா 9,088,008 தொகை அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(இ) ஆண்டின் ஆரம்பத்தில் பொதுக் கடன்பட்டோரின் ரூபா 2,520,250 மீதி பேரேட்டுக் கணக்கின் ஆரம்ப மீதியாக முன்கொண்டுவரப்பட்டு அதற்குப் பதிலாக வேலைக் கடன்பட்டோர் கணக்கில் இந்தத் தொகை செலவு வைக்கப்பட்டு கடன்பட்டோர் கணக்கில் வரவு வைக்கப்பட்டமையால் வேலைக் கடன்பட்டோரின் பெறுமதி ரூபா 2,520,250 தொகை குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) முன்னைய ஆண்டின் இறுதியில் கடன் பட்டோரின் கீழ் ஒதுக்கப்பட்ட மாகாண குறித்தொதுக்க நிதிஏற்பாடுகளுக்குரிய 02 வேலைகளுக்காக 2014 ஆகஸ்ட் 12 ஆந் திகதி ரூபா 1,080,310 தொகையும், மகநெகும நிதிஏற்பாடுகளுக்குரிய 02 வேலைகளுக்காக 2014 திசெம்பர் 19 ஆந் திகதி ரூபா 495,000 தொகையும் கிடைக்கப் பெற்றிருந்ததுடன் அந்தப்பணம் வேலைக் கடன்பட்டோர் கணக்கில் செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் வருமானமாக மூலதன மானியக் கணக்கில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

(உ) ஊழியர் பிணை வைப்பு முதலீட்டு பணத்திற்காகக் கிடைத்த ரூபா 19,789 வட்டித் தொகை ஊழியர் பிணை வைப்பு பொறுப்புக் கணக்கில் ரூபா 131,500 ஆக செலவு வைக்கப்பட்டமையால் ரூபா 111,711 தொகை அதிகரித்து அந்தக் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது.

(ஊ) ரூபா 582,694 கூட்டுத்தொகையான 07 நிலையான சொத்து விடயங்களின் பெறுமதி மீளாய்வாண்டில் மூலதனமாக்கப்படாதிருந்ததுடன் மோட்டார் வாகனத் தளமொன்றை நிர்மாணிப்பதற்காக செலவிடப்பட்ட ரூபா 661,245 தொகையிலிருந்து ரூபா 377,740 தொகை மாத்திரம் மூலதனமாக்கப்பட்டிருந்தது.

### 1.3.2 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

ஏழு நாட்குறிப்புப் பதிவுகள் மூலம் திரண்ட நிதியத்தில் பதியப்பட்ட ரூபா 10,469,294 தொகையான வரவு வைத்தல்கள் மற்றும் ரூபா 1,744,168 தொகையான செலவு வைத்தல்களுக்குரிய பட்டோலை விபரங்களோ அல்லது விளக்கமளித்தல்களோ எதுவும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 2,026,432 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 1,445,876 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | உள்ளவாறான வருமானம் | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | வீதவரியும் வரியும் | 1,937 | 755 | - |
| (ii) | வாடகை | 20,948 | 8,908 | 1,429 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1,881 | 1,970 | 19 |
| (iv) | ஏனைய வருமானம் | 63,129 | 43,275 | 19,722 |

**2.2.2 வாடகை**

**------------------**

(அ) வாராந்த சந்தை வாடகைக்கு விடல்

-----------------------------------------------------------

சபைக்குச் சொந்தமான சூரியவெவ மற்றும் வெனிவெல்ஆர வாராந்த சந்தைகள் 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாகம்) விதி 177 இன் பிரகாரம் கேள்வி கோரப்பட்டு வாடகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. 2014 மார்ச் 07 ஆந் திகதிய கடிதம் மூலம் 2014 ஏப்ரல் முதல் திசெம்பர் வரையான 09 மாத காலப் பகுதிக்காக சூரியவெவ வாராந்த சந்தை ரூபா 9,000,000 தொகையில் வாடகைக்கு பெறுவதற்காக வாடகையாளரொருவரால் கோரப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. சபையினால் 2014 ஆம் ஆண்டில் சூரியவெவ வாராந்த சந்தையிலிருந்து சேகரிக்கப்பட்ட மொத்த வருமானம் ரூபா 6,843,554 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 1,191,353 தரகுப்பணமாக வாடகை சேகரிப்பாளர்களுக்குச் செலுத்தப்பட்டிருந்தன.

இந்த வாராந்த சந்தையைக் கோரியோருக்கு வாடகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்குமாயின் சபையினால் சேகரிக்கப்பட்ட தொகையை விட பாரியளவிலான தொகையொன்றை அறவிட முடியுமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) வருமானக் கைவிடலுக்காக அங்கீகாரம் பெறப்படாமை

----------------------------------------------------------------------------------------------

2014 பெப்ரவரி 11 ஆந் திகதி முதல் மே 11 ஆந் திகதி வரை 03 மாத காலம் வறட்சி நிலையின் காரணமாக விவசாய உற்பத்திகளிலிருந்து வாடகை அறவிடாதிருப்பதற்கு 2014 பெப்ரவரி 11 ஆந் திகதி நடைபெற்ற சபைக்கூட்டத்தின் போது தீர்மானிக்கப்பட்டிருந்தது. இந்த தீர்மானத்தினால் இந்த கால எல்லையில் இழக்கப்பட்ட சராசரியான வாடகை வருமானம் ரூபா 1,103,949 ஆக இருந்ததுடன் ரூபா 50 இற்கு மேற்பட்ட வருமானக் கைவிடல்களுக்காக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 182 ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சரின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(இ) கடை வாடகை

-------------------------

i. நிலுவைக் கடை வாடகை

----------------------------------------------

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 606,900 தொகையொன்று நிலுவையாகக் காணப்பட்ட போதிலும், இந்த நிலுவைப் பணத்தை அறவிடுதல் தொடர்பாக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 159(1) ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

ii. ஒரே தடவையில் சேகரிக்கும் பணம் அறவிடப்படாமை

---------------------------------------------------------------------------------------------

உள்ளூராட்சி ஆணையாளரின் 2011 சனவரி 01 ஆந் திகதி முதல் அமுல்படுத்தப்படுகின்ற தபபா/பபாகொ/2010 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 4 ஆம் பந்தியின் பிரகாரம் ஒரே தடவையில் சேகரிக்கும் பணம் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதித் திகதி வரையில் 2008 ஆம் ஆண்டு முதல் நிலுவையாகக் காணப்பட்ட ரூபா 822,362 கூட்டுத் தொகையான ஒரே தடவையில் சேகரிக்கும் பணத்தை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

iii. வாடகையாளர்களுக்கு குறிப்பிட்ட திகதியில் கடைகள் நிர்மாணிக்கப்பட்டு கையளிக்கப்படாமை

-----------------------------------------------------------------------------------------------------------------

‘‘சூரியவெவ சிங்கித்தி உயன’’ பெயருடைய நிலத்தில் 4 கடைகளை நிர்மாணித்து வழங்குவதற்காக 2010 யூலை 30 ஆந் திகதி கேள்வி கோரல் மேற்கொள்ளப்பட்டு கூடிய விலை கோரிய 4 கேள்விதாரர்களிடமிருந்து ரூபா 1,025,000 கூட்டுமொத்தமாகப் பெறப்பட்டிருந்தது. பணம் செலுத்திய பின் 03 மாதங்களில் கடைகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக இணங்கப்பட்டிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமையினால் கேள்விதாரர்களினால் 2013 பெப்ரவரி 18 ஆந் திகதி சபைக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டிருந்தது. 04 கடைகளை நிர்மாணிக்கும் நடவடிக்கைகள் 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் பூர்த்தி

செய்யப்படாதிருந்ததுடன் இணங்கப்பட்ட நிபந்தனையின் பிரகாரம் கடைகள் நிர்மாணிக்கப்படாமையின் காரணமாக வழக்குக் கட்டணமாக ரூபா 102,000 கூட்டுமொத்தத் தொகையை சபைக்கு செலுத்தி வேண்டி ஏற்பட்டிருந்தது.

### 2.2.3 அனுமதிப்பத்திரக் கட்டணம்

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை அனுமதிப்பத்திரக் கட்டணமான ரூபா 73,450 தொகையை அறவிடுதல் தொடர்பாக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 149 மற்றும் 150(4) ஆம் பிரிவுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் ரூபா 1,847,939 கூட்டுத்தொகையான நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக்கட்டணம் ஆக கிடைக்க வேண்டியிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 இனங்காணப்பட்ட நட்டம்

உத்தேச கூட்டுப்பசளை செயற்திட்டத்திற்காக கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களில் ஒரு பகுதி காணாமல் போயிருந்ததுடன் அது தொலைந்தமைக்கு உரிய பொறுப்பானவர்களிடமிருந்து ரூபா 101,500 தொகை அறவிட வேண்டுமென இலங்கைக் குடியரசின் நிதிப் பிரமாணம் 104 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் 2013 யூலை 09 ஆந் திகதி சிபாரிசு செய்யப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியான 2015 மார்ச் 03 ஆந் திகதி வரையிலும் அந்தப் பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 3.2 ஒப்பந்த நிர்வாகம்

-----------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) கொங்கிரீட் கல் மற்றும் கற்துாள் போக்குவரத்து பெருந்தெருக்கள், துறைமுகம் மற்றும் கப்பற்துறை அமைச்சுச் செயலாளரின் 2014 யூலை 02 ஆந் திகதிய MPH/HYW/MNG/Cer/14-1 ஆம் இலக்க கடிதத்தின் 01 ஆம் பந்தியின் பிரகாரம் மகநெகும கிராமிய வீதி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அமுல்படுத்தப்படுகின்ற வீதிகளுக்காக மூலப்பொருட்களைப் போக்குவரத்துச் செய்யும் போது மூலப்பொருளின் அடிப்படையில் சேர்க்கப்படுகின்ற 10 சதவீத மேலதிக கிரயம் சேர்க்கப்படாது மதிப்பீடு தயாரிக்கப்பட்டதாகக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், சபையினால் அமுல்படுத்தப்பட்ட 11 வேலைகளுக்காக அவ்வாறு நடவடிக்கை எடுக்காமையினால் ரூபா 52,146 தொகை மேலதிகமாகக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) சபையினால் அமுல்படுத்தப்பட்ட 06 வேலைகள் தொடர்பாக 2015 மார்ச் 02 மற்றும் 03 ஆம் திகதிகளில் மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது வீதியின் இருபக்கமும் நிர்மாணிக்கப்பட்ட கொங்கிரீட் தட்டு, வடிவமைப்பு வேலைகள் மற்றும் கற்துாள் போன்ற செயற்பாடுகளுக்குரியதாக ரூபா 394,084 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 3.3 கழிவுப்பொருள் முகாமைத்துவம்

-------------------------------------------------------

பிரதேச சபையினால் கழிவுப் பொருள் முகாமைத்துவ செயற்திட்டத்திற்காக நிலத்தைத் தெரிவு செய்தல் மற்றும் கம்பி வேலி நிர்மாணிப்பதற்குத் தேவையான பொருட் கொள்வனவுகள் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் வேலியை நிர்மாணிப்பதற்காக 2011 திசெம்பர் 30 ஆந் திகதி ரூபா 1,065,900 தொகை செலவில் கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களைப் பயன்படுத்தி உரிய பணிகளைப் பூர்த்தி செய்வதற்கு 2014 திசெம்பர் 31 வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிர்வாகம்

(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்